# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


**<u>விசாரணை நாள் 06.10.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் SA 1250-E-2024</u>**

| | | |
|---|---|---|
| திரு எம்.எல்.தாமோதரன் | .. | மேல்முறையீட்டாளர் |
| | */எதிர்/* | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலகம்,<br>சோழவரம்,<br>சென்னை - 600 067 | .. | பொது அதிகார அமைப்பு |

******

## <u>இறுதி ஆணை</u>

1) இவ்வாணையத்தின் 07.09.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் / சோழவரம் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு ஆர்.கார்த்திகேயன் ஆணையத்தில் 06.10.2026 அன்று ஆஜராகி, 07.09.2026 அன்று ஆணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாதது குறித்த தனது விளக்கத்தை சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தில், 07.09.2026 அன்று காலை தான் விசாரணக்கு ஆஜராக வந்து கொண்டிருந்தபோது, தனது மகனுக்கு உடல்நிலை சரியில்லை என்று தொலைபேசி மூலம் தகவல் வரப்பெற்றதை தொடர்ந்து உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்ததால், தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு 30.09.2026 அன்று வழங்கப்பட்டு, மனுதாரரும் அதனை பெற்றுக் கொண்டு மனநிறைவு கடிதம் அளித்துள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்கள் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2) வழங்கப்பட்ட தகவல்களை பரிசீலித்த ஆணையம், பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்கிறது. மேலும், மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு 30.09.2026 அன்று வழங்கப்பட்டு, மனுதாரரும் அதனை பெற்றுக் கொண்டு மனநிறைவு கடிதத்தை வழங்கியுள்ளதன் அடிப்படையில், இந்த மேல்முறையிட்டு மனுவை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 1250-E-2024**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ஜி.என்.டி சாலை, சோழவரம்
சென்னை - 600 067

திரு எம்.எல்.தாமோதரன்,
எண்.1/225, நேரு தெரு,
சோழவரம்,
சென்னை - 600 067

Copy to file
CR/PA